# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 2/2021 | **CNR No.** | **:** | TNKI13-000111-2020 |
| **Name** | **:** | அழகிரி | **Father's Name** | **:** | பண்ணீர் செல்வம் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW3 |
| **Age** | **:** | 37 | **Village** | **:** | கீழ்மத்தூர் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 12:00 PM | **End Time** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 09.01.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) எனக்கு என்ன வயது என்றால் 37 வயதாகிறது. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் எனது அண்ணன் அழைத்து வந்தார். எனது அண்ணா வாதி எனது பங்காளி முறையாகும். எனக்கு சின்னப்பையன் என்ற கொழந்தை மாக்கான் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. பெரியதாய் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சின்னப்பையன் என்ற கொழந்தை மாக்கான் மற்றும் பெரியதாய் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் 13/4 பி, 125/4 டி ஆகும். 28.09.2016 ம் தேதி என்ன பத்திரம் யார் யாருக்கு எழுதியானர் என்றால் ஜெயராமன் வெங்கடேசனுக்கு தானசெட்டில் மென்ட் பத்திரம் எழுதினார். நான் அந்த பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் கிரையம் செய்யும் பொழுது படித்து பார்த்தேன். நான் அசல் பத்திரத்தை அல்லது நகலை படித்து பார்த்தேனோ என்றால் அசலை

தான் படித்து பார்த்தேன். **வா.சா.ஆ.3** காண்பிக்கப்பட்டு, இதில் வழி பாதை குறித்து ஏதாவது எழுதப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணம் முழுவதையும் படித்து பார்த்துவிட்டு, அதை பற்றி எதுவும் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். வாதியின் வழக்கில் எத்தனை சொத்து விவரங்கள் சொல்லி உள்ளார் என்றார் என்றால் **சர்வே எண்.13/4பி** க்கு மட்டும் தான் சொல்லியுள்ளார். ஒரே சொத்து மட்டும் தான் சொல்லியுள்ளார். வாதியின் வழக்கில் ஏ முதல் பி வரை எத்தனை அடி என்றால் சுமார் 200 அடி இருக்கும். பி முதல் சி வரை எத்தனை அடி என்றால் சுமார் 250 – 300 அடி இருக்கும். சி முதல் டி வரைக்கும் எத்தனை அடி இருக்கும் என்றால் சுமார் 150 அடி இருக்கும். ஏ முதல் டி வரை எத்தனை அடி இருக்கும் என்றால் சுமார் 600 அடி இருக்கும். மேற்படி வழியில் நான் வந்துள்ளேன் என்றால் வந்துள்ளேன்.

(2) பிரதிவாதிகள் மேற்படி வழியில் எத்னை மரங்கள் உள்ளது என்றால் சுமார் 2–3 வருடங்களுக்கு முன்பு வைத்த தென்னை கன்றுகள் உள்ளது. எத்தனை கன்றுகள் அவ்வாறு உள்ளது என்றால் சரியாக தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai